# குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.1, ஜெயங்கொண்டம்.

## CC.No. 43/2016

2026ம் ஆண்டு ஜூலை மாதம் 13ஆம் நாள் திங்கள் கிழமை அரசு தரப்பு சாட்சி–03, திரு.சிற்றரசன் என்பவரின் வாக்குமூலம் (1969ம் ஆண்டின் பிரமாணச் சட்டம் பிரிவு 4ன்படி) திரு.செ.சாஸ்தா குமரன், மூன்றாம் நிலை எழுத்தர் அவர்களால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்தியப்பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | திரு.சிற்றரசன் | வயது | : | 43 /26 |
| த.பெ. | : | ஜெயராமன் | தொழில் | : | விவசாயம் |
| ஊர் | : | தேவனூர் | நிலை | : | LW03/ PW03 |
| வட்டம் | : | | நாட்டினம் | : | இந்தியன் |
| மாவட்டம் | | | | | |

**(எதிரிகள் ஆஜர்)**

**முதல் விசாரணை:**

நான் தற்போது தேவனூரில் வசித்து, விவசாய வேலை செய்து வருகிறேன். அ.சா.1ஐ தெரியும். எதிரிகள் மாயவேல், செல்வக்குமார் ஆகியோரை தெரியும். இந்த வழக்கு சம்பவம் குறித்து எனக்கு எதுவும் தெரியாது. போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**அரசு தரப்பில் சாட்சி பிறழ் சாட்சியாக கருதி குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டதன் பேரில் அனுமதி வழங்கப்பட்டு அரசு தரப்பில் கு/வி.**

போலீசார் விசாரணையில் கடந்த 25.11.2014 ம் தேதியன்று, எங்கள் தெருவைச் சேர்ந்த மாயவேல் வீட்டின் வழியே வந்த ராமஜெயத்தை மாயவேல், செல்வக்குமார், பாபு ஆகியோர்கள் மறித்து, தெய்வசிகாமணிக்கு சாதகமாக சாட்சி சொல்ல வேண்டும் என்றும், அதற்கு ரூ.10,000/– கொடுக்க வந்ததாகவும், ராமஜெயம் அதை வாங்க மறுத்துவிட்டதாகவும், மாயவேலும், செல்வக்குமாரும் ஊரில் எந்த பிரச்சனை என்றாலும் நாங்கள் வரமாட்டோம் என்று சொல்லி மிரட்டியதாகவும், பின்னர், மாயவேல் ராமஜெயத்திடம் ரூ.1 லட்சம் பணத்தை தெய்வசிகாமணி கொடுத்திருப்பதாகவும்,அதை வாங்கிவிட்டு சமாதானமாக போகும்படி சொன்னதை ராமஜெயம் ஒத்துக்கொள்ளவில்லை என்றும் நான் கேள்விப்பட்டேன் என்று போலீசார் விசாரணையில் சொல்லிவிட்டு, தற்போது எதிரிக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை**

/ உண்மை நகல் /
ஒம்/-ப.கனிமொழி,
குற்றவியல் நீதித்துறை நடுவர் எண் 1,
ஜெயங்கொண்டம்.